## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84

### செய்திக் குறிப்பு

### சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கான SDAT ஊக்க உதவித் தொகை திட்டம்

2015–2016–ஆம் கல்வி ஆண்டில் தமிழகத்தில் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி / பல்கலைக் கழகத்தில் பயிலும் தகுதியுடைய விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் மற்றும் மாணவரல்லாதோர்களிடமிருந்து **SDAT** ஊக்க உதவித் தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஊக்க உதவித் தொகை உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி விளையாட்டு வீரர்கள் மற்றும் மாணவரல்லாதோர்களுக்கு ரூ.10000/–ம் மற்றும் கல்லூரி / பல்கலைக் கழக விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13000/– ஆக வழங்கப்படவுள்ளது.

1.7.2014 முதல் 30.6.2015 முடியவுள்ள காலக் கட்டத்தில் விளையாட்டுத் துறையில் வெற்றிகளைப் பெற்று தகுதியும் திறனுமுடைய விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். மேலும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க தேசிய அளவிலான பள்ளி விளையாட்டு குழுமம், அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கழகங்கள், இந்திய விளையாட்டு குழுமம் நடத்தும் போட்டிகள் மற்றும் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.10/– ஆகும். விண்ணப்பத்தினை அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலரின் அலுவலகத்தில் உரிய விண்ணப்பத் தொகையினை செலுத்தி பெற்று கொள்ளலாம்.

இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பத்தினை, விண்ணப்ப விலையான ரூ.10/–ஐ உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அவர்கள் பெயரில் அஞ்சல் ஆணையாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிடையாக 10.09.2016–ந்தேதிக்கு முன்னர் விண்ணப்பதாரரின் மாவட்டத்தின், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அலுவலகத்தில் தக்க அசல் சான்றிதழ் மற்றும் நகல் ஆகியவற்றுடன் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

இணையதள விகவரி: www.sdat.tn.gov.in

(ஒ–ம்) ராஜேந்திர குமார்
அரசு முதன்மைச் செயலர்/
உறுப்பினர் செயலர் (பொ)

/உண்மை நகல் /உத்திரவின்படி அனுப்பப்படுகிறது/

12/08/16

உறுப்பினர் செயலருக்காக

12/8/16

**SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU, CHENNAI - 84**

**PRESS NOTE**

**SDAT SCHOLARSHIP FOR OUTSTANDING SPORTS PERSONS**

The Sports Development authority of Tamilnadu have invited applications for SDAT scholarship from the outstanding sports persons who are studying in the high school/higher secondary /College/University students / Non-Students for the year 2015-2016.

The period of medal winning performance in National level should be from 1.7.2014 to 30.6.2015. The National level competitions/Championship should have been organized by the concerned authorized federations, SGFI, SAI and All India Inter University Sports Board. The Scholarship amount will be Rs.10000/- for high school/higher secondary students and Non-Students and Rs.13000/- for Colleges/University students.

The Sports Development Authority of Tamilnadu Scholarship applications are available in all SDAT District unit office. The cost of the application form is Rs.10/-

The application may also be downloaded through the SDAT website www.sdat.tn.gov.in the players are requested to enclose a Demand Draft or postal order for Rs.10/- drawn in favour of "Member Secretary, Sports Development Authority of Tamilnadu" towards the cost of the application. The downloaded application sent without the DD or postal order will not be considered. Last date for submitting the duly filled in application in the District Unit is **10.09.2016.**

(Sd/-) Rajendra Kumar
Principal Secretary to Govt. /
Member Secretary (i/c)

/True Copy/Forwarded By Order/

12/08/16

for Member Secretary

12/8/16